
உ

## கனடா துர்க்கேசுவரம்

# அன்னை துர்க்கை அடிதொழு வெண்பா



வெளியீடு

யாதவி - சண்முகானந்தம்



உ
சிவமயம்



**கனடா துர்க்கேசுவரம்**

# அன்னை துர்க்கை அடிதொழு வெண்பா

❖❖❖❖❖

ஆக்கம் :
பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்
தொ.பே. : 416 701 9265

2006 ஆடி வெளியீடு :
யாதவி - சண்முகானந்தம்
லோறன்சு அன் பார்மசி,
கனடா.

உ

சிவமயம்



# கனடா துர்க்கேசுவரம்



## அன்னை துர்க்கை அடிதொழு வெண்பா

### காப்பு

**மேலை இணுவில் செகராச வேழமுகா
கோலக் கனடாத்துர்க் கேசுவரச் – சூலினியாம்
துர்க்கை பரிந்தெம் துயர்துடைக்கச் சிந்தைகொள
வைக்கத்தா வண்பா வளம்!**

### நூல்

தூய்மை சுடரும் ரொறென்ரோத்துர்க் கைகோவில் - 1
தாய்மை அருளினிக்கும் தன்மைகளை - வாயினிக்கப்
பாட்டில் வடித்துப் பரிசொன்றுங் கேட்பேன் தாய்
நாட்டார்க் கருள நலம்!

அன்றுமார்க்கம் சூழலிலே அங்குரித்த கொற்றவைதான்
இன்றிந்த வண்ணப் பெருங்கோவில் - பொன்னிருக்கை - 2
மீதமர்ந்தாள் பத்திபொலி யுங்கணே சுச்சுவாமி
மாதவத்தால் வாய்த்த வரம்!

ஆசாரத் தோடும், அறநாட்டம் ஆன்மபலம்
ஆசேறாச் சிந்தையுங்கொள் அந்தணர்தம் - பூசையிலே
கட்டுண்டும் பத்தர்தம் கண்ணீரில் நெக்குண்டும் - 3
மட்டிலருள் வாய்ந்தாளம் மா!

உ
சிவமயம்



கும்பிடுங் கொள்கைமட்டும் கொண்டுவரும் பத்தர்கள்
நம்பிநேர்த்தி வைத்துவரம் நண்ணியவர் - அம்பாள்
ரொறென்ரோத்தாய் துர்க்கா சுடர்க்கோவில் மொய்ப்பார் - 4
பறந்தொழியத் துன்பம், பயம்!

பத்தா யிரம்கல் பறந்திங்கே வந்துள்ளோம்
அத்தாய்மண் நம்மோர் அவலங்கள் - அத்தனையும்
நீக்கி யருள்புரிய நீயன்றி யாருள்ளார்? - 5
காக்கும்உன் காலே கதி!

உந்துகளி லேறியும் ஓடி நடந்தும் நாம்
வந்துன்றன் கோவில் மருவுங்கால் - அந்தந்த
ஈழத்துக் கோவில் எழிற்காட்சி தந்தணைத்தாய்! - 6
வாழியெம் துர்க்கைஅம் மா!

வயச்சிங்க மேறீ! மகிடசங் காரீ!
நயந்தேத்தி நற்றமிழ் சைவம், - பயமின்றிக் - 7
காலமெல்லாம் வாழக் கனடாவாழ் துர்க்கையம்மா
சாலுமருள் நல்வரமும் தா!



விலாவொடிய வேலைக் களைத்தும்உன் கால்கள்
குலாவுமொளி கண்டேத்திக் கூடில் - கலாபம் - 8
கொளுங்குகன் கொஞ்சும் ரொறென்ரோஆள் துர்க்கா,
பழையபடி யேறும் பலம்.

மெப்பிள்க்காய்ச் சோனையாய் மிஞ்சுபல ஏக்கங்கள்
கப்பிக் கவலும்நம் நெஞ்சங்கள் - தொப்புள்க் - 9
கொடியில் புவனம் பலவும் கொளும்தாய்
அடிசேர ஏக்கம் அறும்!

அன்னக் கொடைகள் அகதிச் சிறுவர்க்கும்
தன்னா லியலும் தருமங்கள் - எந்நாளும் - 10
நல்கும் அறக்கோவில் நாயகியே அன்னை துர்க்கா
நில்நிறைந்திங் கெந்தமிழர் நெஞ்சு!

இனியெம் தலைமுறைகள் இங்கேதான் வாழும்!
வினைவென்று வாழ்வில் விளங்க - தினமேத்தும் - 11
துர்க்கையுன் கோவில் தொடர்ந்திலங்க வேண்டுமென
அர்ப்பணிப்போம் எங்கள்வாழ் வை!

உ
சிவமயம்





பல்வேறு தட்பவெப்பப் பாய்ச்சல்கள் வேண்டிநிற்கும்
பல்வேறு தேவைகள் மத்தியிலும் - வில்வருத்தப்
பட்டேனும் ஈழத்தெம் முற்றார் உயிர்காக்கும் - 12
திட்டமெம்முள் துர்க்கையம்மா சேர்!

அணிசெய் மகாமாரி, ஆடலிறை, வேலன்,
கணநாதன், வாணி, வடுகன் - திணிமூர்க்கத்
தக்கனைச் சாய்வீர பத்திரன், செந்திரு சூழ் - 13
தக்கபரி வாரஞ்சார்ந் தாய்!

திருவேஎற் காட்டுக் கருமாரி, மேலும்
திருக்கடவூர் சேர்அபி ராமி - உருக்கோலம் - 14
காண்வசந்த மண்டபத்தில் மாத்தளைத்தாய் காட்சியுமே
பூண்டதுர்க்கை பார்க்கே புகல்!

காசி விசாலாட்சி காஞ்சியிற் காமாட்சி
வீசுபுகழ்த் தென்மதுரை மீனாட்சி - பேசும் - 15
அறுபத்து நான்காம் அருட்சத்தி பீடம்
உறைபவளே துர்க்காநொந் தோம்!



வற்றாப் பழையன்னை மாண்தெல்லி யூரன்னை
நற்றாய் நயினைநாக பூசணியாய் - மற்றீழச் - 16
சுட்டி புரத்தாள் திருமலைக் காளியாய்ப்
பட்டருள்வாய் கண்ணிற் பலம்!

மங்கலை, நீலி, அபிராமி, பார்வதி
பிங்கலை, சூலி, மனோன்மணி, - சங்கரி - 17
ஆரணி, நாரணி, பூரணி, கொற்றவைப்
பேரெல்லாம் தாயுன்பெட் பே!

வேப்பிலை நாயகியாய் வேதங்கள் நாயகியாய்
காப்புக் கவுரி, திருவிளக்குப் - பூப்பொலி - 18
பூசை உவக்கும் புராந்தகி, கண்ணகியாய்
மாசகற்றும் துர்க்கைஅம் மா!

அடியர் மனத்தாள், அரன்தன் னுடம்பாள்,
கடலில் அமிழ்தாள், கமலம் - படிவாள், அத் - 19
தக்கன் புதல்வி, தவஇமவான் செல்வி எங்கள்
துர்க்கையல்லால் உண்டோ துணை?

உ
சிவமயம்





தைப்பூச நன்னாள் தமிழ்வேள் முருகனுக்கே
ஒப்பில்கை வேலொன் றுபகரித்த - தப்பில்
பரிவாள்மா தங்கி பயிரவி கங்கா - 20
புரந்தரிநம் துர்க்கைப் புகல்!

மாயவனின் தங்காய், மயிலோன், ஐங் கையனுக்கும்
ஆயகலை அத்தனைக்கும் அன்னையளே - தூயமனம்
புக்குறையும் பொன்மகளே, தாய்நாட் டுறவுகளின் - 21
துக்கமெல்லாம் இன்றே துடை!

சிவகாமி, நந்தினி, நாரா யணியாய்ச்
சிவநாச்சி, தேவி, சிவனி - செவிக்குழையை
வண்ண நிலவாக மாற்றபி ராமியாய் - 22
நண்ணுதுர்க்கா நல்காய் நலம்!

நவக்கிரகம், நாயன்மார் விக்கிர கங்கள்
சிவக்காட்சிச் சிற்பங்கள் தாங்கும் - கவின்சால் - 23
ரொறென்ரோத் திருக்கோவில் துர்க்கைதாள் ஏத்தல்
மறம், பகைகள் மாய்க்கும் மருந்து!

உ
சிவமயம்



வாகனங்கள், சப்பறம், தேர், திரு மஞ்சமுடன்
யாகசாலை, மண்டபங்கள் அத்தனையும் - வாகுடனே - 24
வாய்த்து ரொறென்றோ மகிழ்ந்துறையும் துர்க்கை நீ
தாய்த்தெய்வம் பாரினுக்கே தான்!

நன்னீர்க் குடமுழுக்கு நண்ணியின் றைந்தாண்டாய்
இன்னருள் துன்னிவரும் ஈசுவரீ - என்றுமுல - 25
குள்ளவரை இங்கெம் குலம்நீடி நின்புகழைத்
தெள்ளுதமி ழிற்பாடச் செய்!

நவராத் திரிஒன் பதுநாள் விழாக்கள்,
நவகோடி அர்ச்சனைகள், ஆண்டில் - துவசக் - 26
கொடியேற்றம் தொட்டிருபத் தைந்து விழாக்கள்
இவைபலவும் துர்க்கை எழில்!

சற்பிர சங்கம், தமிழோ டிசைபாடல்,
பற்பல இந்துக்கொண் டாட்டங்கள் - அற்புதமாய் - 27
அன்னை ரொறென்ரோ அகத்தில் நிகழ்வதனால்
இன்னல்தவிர்ந் தின்புறுவோ மே!

உ
சிவமயம்



குங்குமத்தா யேசரணம்! கூர்த்தருளம் மாசரணம்!
மங்கலத் தாய்நின் மடிசரணம் - கங்கையணி
கூத்தனைக் காக்கக் குரல்வளை யைப்பிடித்த - 28
ஆத்தாள் எமைக்காக்கா யா?

வையகத்து நாடெல்லாம் மாதா வழிபாடு
செய்ய அடியிட்ட செய்யள், - தையலர்க்கு
நாயகிபா கேசுவரீ, நாதாங்கீ, வீரசண்டீ, - 29
தாயேஉன் தாள்வீடே தா!

இங்குறை தாயகத்தார் ஈட்டறி வாற்றலெலாம்,
பொங்கியெழச் சைவம் பொலிந்ததமிழ், - மங்கலமாய் - 30
உன்னருளைப் பாடிநிதம் ஓங்குவிக்கக் கையாண்டும்
அன்னாய் ரொறென்ரோவை ஆள்!

அப்பப்பா, அம்மம்மா ஆன்ற தலைமுறைக்கும்,
அப்பாஅம் மாவாம் அவர்களுக்கும் - அப்பாலும் - 31
பேசிப்பா டித்தமிழில், பிஞ்சுகளும் ஏத்தஉனை
ஆசைகொள வைப்பாய்துர்க் கா!



உன்னைத் தொழும்நாங்கள் உன்சேய்கள் என்ற அந்த
அன்பொற் றுமையெம்முள் ஆக்கிடுவாய் - இன்னல்செய் - 32
வேற்றுமைகள் வேர்பாற்றி ஆன்மீக மெய்ந்நெறியின்
பாற்படுத்து துர்க்கா பரிந்து!

தொண்டர்தம் முள்ளத்தே துய்யாய் அடக்கமென
விண்டுரைத்த ஔவை விளம்பர்த்தம் - கண்டெம் - 33
இளையோர் தலைமுறையுன் இல்லந் திரள
இழுதுர்க்கா இங்கின்பம் ஈந்து!

உன்மண் டபத்தில் உவந்து தமிழ்ச்சிறுவர்
முன்வந் தமர்ந்து முறையாக - பொன்போல் - 34
திருமுறைகள் பத்தித்தேன் தித்திக்கப் பாட
அருள்புரிவாய் துர்க்கைஅம் மா!

கொட்டும் பனியிற் கொடுகும் விறைப்பினிலும், - 35
சுட்டெரிக்கும் கோடைத் துயர்வெந்தும் - தட்டுத்
தடுமாறி நாளெல்லாம் தாயுன்னைத் தேடி
அடைகின்றோம் துர்க்கைஅம் மா!



சாந்தி தரும்நிழலே, தண்ணளியே, உன்னருளை
மாந்தி மயங்கி மகிழ்வாழ்வை - ஏந்தி
இருந்திடில் எத்துயரம், எந்நோய் நெருங்கும்? - 36
கரும்புன் கருணைதுர்க் கா!

சிந்துவெளிக் காலத்தொல் சின்னங்கள் சொல்லுவன
அந்தஅடி நாளும் அருளினையாம் - குந்தி
ரொறென்ரோ திகழ்துர்க்கா தொன்மை புதுமை - 37
இறைவிதாள் எங்கள்காப் பே!

கடவுளை நம்பல் கசிதல் தடுக்கும்
கொடும்பழியாற் குற்றுயிராய் வீழ்ந்து - மடிவோரைத்
தாயாய்எம் துர்க்கை இழுத்தாண்டு தண்ணளியால் - 38
தூயாராய்ச் செய்க தொடர்ந்து!

நவகோள் இறைவீ நலியாதெம் சேய்கள்
அவைகோளின் ஆரருள் ஓங்க - தவறாமல் - 39
இக்கணமே புக்கிருந்து எம்சேய் மனங்களிலே
தக்கஇறை பக்திநலம் தா!



சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவி னோர்நாமும்!
எல்லாந் தெரிந்தவரே இல்லையம்மா - நல்லநெறி - 40
எங்கட்குங் காட்டி, இயைந்தொழுகும் வீறீந்து
துங்கமுற நிற்பாய் துணை!

அகிலாண்ட கோடிப் பிரமாண்ட நாயகியே
சகமேழும் பூண்தண் ணளியே! - மகிமை - 41
லந்திகா, லாகினி, ரஞ்சினி, காளீ,
சிலம்பினாய் காப்பாய் தினம்!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதன் மூலமே
தெய்வம்நின் சித்தத் திரக்கம் - எய்திடலாம்! - 42
இந்தப் பெருஞானம் ஈந்தருளி வாழ்வீயும்
சுந்தரியெம் துர்க்கை துணை!

வஞ்சமற்ற பிஞ்சுகளும் வல்லரக்கர் குண்டுகளால்
நெஞ்சதிர்ந்தும் அஞ்சியுமே நீறாகும் - வெஞ்சமரால் - 43
வெந்தழியும் நாடுகளில் மீளவைக்கச் சாந்தி, பத்தி
தந்தருள்வாய் துர்க்கைமா தா!

உ
சிவமயம்





பிறந்தமண்ணை யுத்தப் பெருந்தீ விழுங்கப்
பறந்தோடி வந்தோம் பதறி - துறந்தோட
வாய்ப்பின்றி அங்கே வதையுண்ணெம் முற்றார்க்கும் - 44
தாய்த்துர்க்கா மீட்சியினைத் தா!

அடிக்கின்ற கையை அடிக்கா தடக்கில்
தடுக்கும்கை தானாகத் தாழும் - தடுக்கின்ற
கையினையே கட்டநிற்கும் காசினிக்குப் புத்தியினைத் - 45
துய்யவளே துர்க்கா சுடர்த்து!

காக்கவந்த விஞ்ஞானக் கண்டு பிடிப்பெல்லாம்
தீய்க்கிறவே மானுடத்தை! சிந்தையெலாம் - பூக்கவைப்பாய்
சாலினிநீ தாயாகித் தந்தவையே மண்ணுலகில் - 46
சாலுயிர்கள் யாவுமென்ப தை!

மாறாப் பிணிமாற்றி, மங்கை கழுத்தினிலே
ஏறாத தாலியினை யேற்றுவித்து - வேறாய்ப் - 47
பிரிந்த குடும்பம் பிணைத்து, வறுமை
துரந்தருளும் துர்க்கா துணை!



பிள்ளைவரம், பிள்ளை தடுக்கும் வரமெதுவும்
உள்ளுருகி வேண்ட உவந்தருளி - தள்ளரிய - 48
தீக்குணம் யாவையுமே தீய்த்தான்ம பக்குவத்தை
ஊக்குகின்றாய் துர்க்கை உவந்து!

நடுப்புள்ளி நீயாக நம்வாழ்வு சுற்றின்
நொடிப்பதில்லை வாழ்வு! நுவன்றாய் - விடுத்திதனை, - 49
கண்டபடி ஓடிக் கலங்கும் எமக்குய்தி
உண்டாமோ துர்க்கா உரை!

பல்லினமும் பல்மொழியும் பல்மதமும் பல்பண்பும்
புல்லியிங்கு வாழும் புதுமையன்றி - பல்லினமும் - 50
உன்னருளின் இன்பம் உணர்ந்துன் கால் வந்திடவும்
அன்னை துர்க்கா எண்ணி அருள்!

"உனக்கே முதன்மை! உனக்கே அடிமை!
எனைக்கா!" எனவுன் அடிசேர் - மனத்தாகம் - 51
பிள்ளைகளுக் கூட்டும் பெருங்கடமை பூண்பித்திங்
குள்ளோர்க் கருள்வாய் ஒளி!.

# இதுவரை வெளிவந்துள்ள நூலாசிரியரின் பக்தி நூல்கள்

1. இணுவில் செகராசப்பிள்ளையார் பிள்ளைத்தமிழ்
2. இணுவில் முருகன் பிள்ளைத்தமிழ்
3. இணுவில் ஞானவைரவர் திருவிரட்டை மணிமாலை
4. இணுவில் முக்கோட்டத்துதி
5. இணுவில் அன்னை நாச்சி அருள்மஞ்சரி
6. கிளி. கந்தபுரம் முருகன் திருப்பள்ளியெழுச்சி
7. கந்தபுரம் முருகன் மும்மணிக்கோவை
8. கந்தபுரம் இத்தியடி அம்மன் திருப்பள்ளியெழுச்சி
9. கந்தபுரம் இத்தியடி அம்மன் திருவூஞ்சல்
10. கந்தபுரம் கண்ணன் தூது
11. கந்தபுரம் கண்ணன் கவசம் (ஒலிநாடாவாகவும்)
12. கந்தபுரம் கண்ணன் திருவூஞ்சல்
13. கந்தபுரம் கரும்புத்தோட்ட விநாயகர் திருவூஞ்சல்
14. கந்தபுரம் காட்டம்மன சிந்து
15. கந்தபுரம் முத்துமாரியம்மன் திருவூஞ்சல்
16. கந்தபுரம்நாகதம்பிரான் திருவூஞ்சல்
17. கந்தபுரம்துர்க்கையம்மன் திருவூஞ்சல்
18. கந்தபுரம் கொண்டலடி ஞானவைரவர் பதிகம்
19. வன்னேரிக்குளம் ஐயனார் அருள்மங்கலம்
20. வன்னேரிக்குளம் ஐயனார் திருவூஞ்சல்

21. வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதர் திருவிரட்டை மணிமாலை
22. மல்லாவி யோகபுரநாதர் சேவடிச்சிந்து
23. மல்லாவி யோகபுரநாதர் திருப்பள்ளியெழுச்சி
24. அக்கராயன் சித்திவிநாயகர் திருவடி புகற்பா
25. முழங்காவில் முருகன் திருவூஞ்சல்
26. பாலம்பிட்டி முத்துமாரியம்மன் மும்மணிக்கோவை
27. பரந்தன் பொறிக்கடவைக் கண்ணகி அம்மன் தலபுராணம்
28. பலாலி மனோன்மணி அம்மன் திருவூஞ்சல்
29. உடுப்பிட்டி மனோன்மணி அந்தாதி
30. நுணாவில் கண்ணகி நான்மணிமாலை
31. கைதடி சிவபூதராயர் பதிகம்
32. கிளி. ஆனந்தபுரம் துர்க்கையம்மன் துதி
33. வேலணை ஸ்ரீகாளியம்பாள் திருப்பள்ளியெழுச்சி
34. உடுவில் ஸ்ரீகாளியம்பாள் திருவூஞ்சல்
35. உடுவில் புளியடி ஞானவைரவர் திருவூஞ்சல்
    உடுவில் கற்பகப் பிள்ளையார் திருவூஞ்சல்
36. கந்தரோடை வீரகத்திப்பிள்ளையார் திருவூஞ்சல்
37. இரணைமடு கனகாம்பிகை நான்மணிமாலை
38. சுன்னாகம் ஐயனார் அம்புலித் தூது
39. சுன்னாகம் சொர்ணபத்திரகாளி திருவூஞ்சல்
40. அச்சுவேலி வடக்கு முருகன் திருவூஞ்சல்
41. தொண்டைமானாறு சந்நிதிமுருகன் வெண்பா.

❖❖❖❖❖

# A&S GRAPHICS INC.

**1000 Bus Card $ 47**

உங்கள்
அனைத்துவிதமான
அச்சகத் தேவைகளுக்கும்
எங்களை நாடுங்கள்

**2105 Midland Avenue, Unit 10, Scarborough, ON M1P 3E3**

**Tel : 416 752 6951** Fax : 416 752 9707

E-mail :sutherskumar@yahoo.com

படியுங்கள்!

# பல்சுவை விருந்து

# உங்கள் நண்பன்

(மாதம் இருமுறை)

## கலை இலக்கியச் சஞ்சிகை

2105, மிட்லன்ட் அவெனியூ,
ஸ்காபரோ, ஒன். யூனிற் 10, M1P 3E3
கனடா.